# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதளமுகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு.மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.72/மா/2024**

**நாள்: 21.01.2025**

| | | |
|---|---|---|
| திரு.எஸ்.வி. உதயகுமார்<br>நாகர்கோவில். | .......... | முறையீட்டு<br>மனுதாரர் |
| ஆணையர்<br>நாகர்கோவில் மாநகராட்சி,<br>நாகர்கோவில். | .......... | எதிர்மனுதாரர் |

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S.ரோடு, கதவு எண் 439-A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. எஸ்.வி.உதயகுமார் என்பவரின் 12.03.2024 மற்றும் 24.05.2024 நாளிட்ட மனுக்கள் இம்முறைமன்றத்தில் 14.03.2024 மற்றும் 27.05.2024 அன்று பெறப்பட்டு, 72/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S.ரோடு, கதவு எண் 439-A என்கிற முகவரியில் வசிக்கும் திரு.எஸ்.வி.உதயகுமார் என்பவர் 12.03.2024 மற்றும் 24.05.2024 நாளிட்ட தனது மனுக்களில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் மாநகராட்சியின் ஐந்தாவது வார்டு மாமன்ற உறுப்பினராக செயல்பட்டு வருகின்ற நான் இந்த மாமன்றம் கூடியதிலிருந்து மாநகராட்சியால் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீட்டுத் தொகையில் இருந்து ஒன்று அல்லது இரண்டு சதவீதங்கள் மட்டுமே குறைந்து ஒப்பந்தம் கேட்கப்பட்டதாக மாமன்ற அனுமதிக்கு வருகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளியில் அனைத்தும் இருவர் மட்டுமே கலந்து கொண்டதாக பொறியியல் துறை மூலம் மாமன்றத்திற்கு தெரியப்படுத்தப்படுகிறது . இது இந்த மாநகராட்சி பொருத்தவரை இயல்புக்கு மாறான ஒன்று. ஏனெனில் நான் இதற்கு முன்பு நகராட்சியாக இருந்த காலத்திலும் வார்டு மன்ற உறுப்பினராக செயல்பட்டபோதும் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் போட்டியின் மூலம் 10 முதல் 20 சதவீதங்கள் வரை குறைத்து சென்றது. ஆனால் தற்பொழுது ஒப்பந்ததாரர்களுக்கு அரசியல் நெருக்கடி மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் விலைக்கு கொடுக்கப்படுகிறது. இதனை மறைமுகமாக மன்றத்திற்கு சுட்டிக்காட்டும் வகையில் நான் எழுத்து மூலம் அனைத்து மாமன்ற கூட்டத்திலும் என்னுடைய

எதிர்ப்பை பதிவு செய்து வந்தேன். இருந்தும் இன்று வரை எந்த பயனும் அளிக்கவில்லை. மாறாக, தற்பொழுது மாநகராட்சியில் ஊழல் அளவுக்கு அதிகமாக மலிந்து விட்டது. அதற்கு இந்த ஆதாரங்களே சாட்சி. இன்று மாநகராட்சியால் நடத்தப்படும் ஒப்பந்தப் புள்ளிகளில் ஒப்பந்த அறிக்கையின் வரிசை எண்.13,21,22,43 மற்றும் 44 ஆகிய ஐந்து ஒப்பந்தப் புள்ளிகளும் ஏற்கனவே எண்பது சதவீத பணிகள் முடிவடைந்து விட்டன. இந்த பணியை செய்தது வரிசை எண் 43—ல் உள்ள பணியை செய்த ஒப்பந்ததாரர் கே.மணிகண்டன். சரக்கல் விளை வரிசை எண்.13, 21 மற்றும் 44ல் உள்ள பணியை செய்தது ஜெங்கின்ஸ். வரிசை எண்.22 பணியை செய்தது ஜோசப் மைக்கேல் ராஜ். இவர்கள் மூவரும் இன்று இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருகிறார்கள். ஆனால் ஏற்கனவே பணி முடிக்கப்பட்டது. அதற்கான புகைப்படங்களை இணைத்துள்ளேன். இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்போது ஒப்பந்ததாரர்கள் மின்னணு மூலம் ஒப்பந்தப்புள்ளியை இயற்றியதை உறுதிப்படுத்தும் அட்டைகளை சமர்ப்பித்து இம்மாநகராட்சியில் ஒப்பந்தப்புள்ளிகள் பேரத்தின் அடிப்படையில் நடைபெறுவது மட்டுமல்லாமல் ஒப்பந்தம் போடுவதற்கு முன்பே ஒப்பந்ததாரர்களால் அந்தப்பணியை செய்துவிட்டு கடமையை செய்யும் எண்ணத்தில் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி வருகிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

2. மேலும், திரு.எஸ்.வி.உதயகுமார் அவர்கள் தனது 24.5.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

12.3.3024 அன்று நாகர்கோவில் மாநகராட்சியில் நடைபெறும் ஒப்பந்தப்புள்ளி ஊழல் சம்பந்தமாக புகார் மனு அனுப்பியிருந்தேன். அதில் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.ந.க.எண்.இ1/2433/2024ஐ சுட்டிக்காட்டி அதன் வரிசை எண்.13, 21, 22, 43, 44 ஆகிய ஒப்பந்தப்புள்ளிகளில் பணி முடித்த பின்னர் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதால் அதற்கான ஒப்பந்தகாரர்கள் பெயரையும் பணிகள் நடைபெற்ற புகைப்படத்தையும் ஒப்பந்தப்புள்ளி முடிவதற்கு முன்பே தங்களுக்கு தெரியப்படுத்தி ஒப்பந்த விதிமுறை மீறலை நிரூபித்தேன். அந்த புகார் அனுப்பிய இரண்டு நாட்கள் கழித்து நான் நாகர்கோவில் மாநகராட்சிக்கு நேரடியாக சென்றபோது ஒப்பந்தகாரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி ஒதுக்கப்பட்டு அவர்களின் பெயர்கள் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் எழுதப்பட்டிருந்ததை நேரில் பார்த்ததும் வரைவாளரிடம் அதனை என்னிடத்தில் தருமாறு கேட்டேன். அவர்கள் உடனே என்னிடத்தில் அதை வழங்கினார். அதனை நான் என்னுடைய கைப்பேசியில் புகைப்படம் எடுத்தேன். அந்த ஒப்பந்தப்புள்ளிகள் தற்போது Code of Conduct Rule இருப்பதால் வலைதளத்தில் திறக்கப்படவில்லை. வலைதளத்தில் திறக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் இரு முறைகளில் திறக்கப்படுகின்றன. முதல் நாள் Technical Bid அதாவது தொழில்நுட்ப அனுமதி ஒப்பந்ததாரர்களின் தகுதிகளை பார்த்து ஒப்பந்தப்புள்ளி பொறியாளரால் Digital Signature மூலம் எற்கவோ அல்லது நிராகரிக்கவோபடும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் யார் யார் கலந்துள்ளனர் என்பதை யார் வேண்டுமானாலும் வலைதளத்தில் தெரிந்துகொள்ளலாம். அதிலிருந்து 24 மணி நேரம் கழித்து Digital Signature Certificate மூலம் திறக்கப்படும்போது ஒப்பந்தப்புள்ளிகளை யார் யார் பெற்றுள்ளார்கள் என்பதை வலைதளம் BOQ மூலம் ஒப்பந்ததாரர்களின் விலை பட்டியல் வெளியில் வரும். அதன் பின்னர் அதை யார் வேண்டுமானாலும் வலைதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அது தற்போது Code of Conduct Rule இருப்பதால் PRICE BID திறக்க இயலவில்லை. இருப்பினும் இந்த ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் 7 ஒப்பந்தப்புள்ளிகள் Code of Conduct Rule விதிமுறைகளை மீறி திறக்கப்பட்டுள்ளன. அவை மதிப்பீட்டு எண்.518/2023-24, 520/2023-24, 521/2023-24, 522/2023-24, 523/2023—24, 548/2023-24, 549/2023-24 அதையும் தங்களுக்கு தெரியப்படுத்துவதோடு அதை உறுதி செய்யும் விதமாக அதன் BOQ Sheet—ஐ இந்த கடிதத்தில் இணைத்துள்ளேன். ஒப்பந்தப்புள்ளிகள் செட் அப் செய்வதையும் 04.06.2024 அன்று Code of Conduct Rule முடிந்த

பின்பு இந்த ஒப்பந்தப்புள்ளியில் யார் யாருக்கு செல்ல இருக்கின்றது என்பதை நான் முன்கூட்டியே இந்த கடிதத்தின் மூலம் தங்களுக்கு தெரிவிக்கிறேன். இதன்மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் செட் அப் செய்வதை உறுதிப்படுத்தும் விதமாக தங்களுக்கு இந்த புகார் மனுவை சமர்ப்பிக்கிறேன். மேலும், 12.03.2024 அன்று வழங்கப்பட்ட புகார் மனுவில் ஒப்பந்தப் புள்ளிகள் செட்டப் செய்வதோடு மட்டுமல்லாமல் ஒரு ஒப்பந்தப்புள்ளிக்கு இருவர் மட்டும் ஒப்பந்தம் கோரி வருகிறார்கள். இது நாகர்கோவில் மாநகராட்சியின் முந்தைய கால கட்டங்களில் இல்லை என்று கூறப்பட்டிருந்தது. அதை இந்த கடிதத்தில் உள்ள ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்துவதால், 12.03.2024 புகார் மனுவோடு இணைத்து விசாரிக்குமாறு வேண்டுகிறேன்.

3. இக்கடித்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் மூலம் நாகர்கோவில் மாநகராட்சியில் 12.03.2024 அன்று நடைபெற்ற செட்டப் டெண்டரில் ஒப்பந்தப்புள்ளிகள் Code of Conduct Rule முடிந்தவுடன் யார் யாருக்கு வழங்கப்பட இருக்கின்றன என்பதை முன்கூட்டியே வரைவாளரால் என்னிடத்தில் வழங்கப்பட்ட ஒப்பந்த அறிக்கையில் எழுதப்பட்டிருந்த ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் அடங்கிய புகைப்படம் மூலமும் அதை உறுதிப்படுத்தும் விதமாக வலைதளத்தில் ஒப்பந்ததாரர்கள் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு டம்மியாக போடப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பெயர்கள் அடங்கிய Acknowledgement ரசீது மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர்கள் டம்மி போடுவதற்கு காரணம் இரு ஒப்பந்தபுள்ளியில் இருந்தால் மட்டுமே ஒப்பந்த விதிமுறைப்படி ஒப்பந்தம் ஏற்கப்படும். இக்கடிதத்தோடு வரைவாளர் என்னிடத்தில் வழங்கிய புகைப்படம் மற்றும் வலைதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட Acknowledgement-க்கான ரசீதும் இணைக்கப்பட்டுள்ளது.

4. மேற்கண்ட புகார் மனுக்கள் தொடர்பாக நாகர்கோவில் மாநகராட்சியிடமிருந்து அறிக்கை கோரப்பட்டது. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தனது 12.09.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

1. ஒப்பந்தப்புள்ளி வரிசை எண்.13

மாநகராட்சி மேற்கு மண்டலம், ஆசாரிப்பள்ளம் பேரூராட்சி கட்டிட பராமரிப்பு பணிக்கு ரூ.9,20,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.183 நாள் 23.02.2024-ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி ஒளிவு மறைவற்ற சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி மின்னணு முறையில் (E-Tendering) முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள திரு.R.ஜெங்கின்ஸ் (0.75% மதிப்பீட்டை விட குறைவு) ஒப்பந்ததாரருக்கு மாமன்ற தீர்மானம் எண்.381 நாள் 27.06.2024-ன்படி மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு 11.07.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணி தற்சமயம் நடைபெற்று வருகிறது.

2. ஒப்பந்தப்புள்ளி வரிசை எண்.21

வார்டு எண்.14 மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் கூடுதல் அபிவிருத்தி பணிகள் ரூ.15.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 12.03.2024 அன்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மானம் எண்.191, நாள் 23.02.2024-இன்படி மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி மின்னணு முறையில் (E-Tendering) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.R.ஜெங்கின்ஸ் (1.43% மதிப்பீட்டை விட குறைவு) ஒப்பந்ததாரருக்கு 11.07.2024 அன்று மாமன்ற தீர்மானம் எண்.387 நாள் 27.06.2024-இன்படி ஒப்புதல் பெறப்பட்டு

பணியாணை வழங்கப்பட்டது. புதிய மாநகராட்சி அலுவலக கட்டிடப்பணிகள் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் ICGF/O&M Gap filling fund 2018-19 மற்றும் பொது நிதியின் கீழ் கட்டிடப் பணிகள் மட்டும் முடிக்கப்பட்டுள்ளது. கூடுதலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகள் இது நாள் வரை 80% பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைப்பெற்று வருகிறது.

3. ஒப்பந்தப்புள்ளி வரிசை எண்.22

வார்டு எண்.2 பார்வதிபுரம் பேருந்து நிலையம் அருகில் கழிப்பிடம் கட்டும் பணி ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 16.02.2024 அன்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மானம் எண்.234 நாள் 23.02.2024-இன்படி மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு, தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி ஒளிவு மறைவற்ற சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன்படி மின்னணு முறையில் (E-Tendering) முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அளித்துள்ள திரு.S.ஜோசப் மைக்கேல் ராஜ் (0.05% மதிப்பீட்டை விட குறைவு) ஒப்பந்ததாரருக்கு மாமன்ற தீர்மானம் எண்.382 நாள் 27.06.2024-இன்படி ஒப்புதல் பெறப்பட்டு, 11.07.2024 அன்று பணியாணை வழங்கப்பட்டது.

மேலும் மேற்படி மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட கழிப்பறை கட்டும் பணியானது தூய்மை பாரத இயக்கம் 2.0 (SBM 2.0) திட்டத்தின் கீழ் ரூ.19.24 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு திரு S.ஜோசப் மைக்கேல் ராஜ் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைப்பெற்று வந்ததில் கட்டிடப்பணி மட்டும் மேற்படி மதிப்பீட்டு தொகையில் முடிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி கழிப்பறையினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு மேற்படி கட்டிடத்தில் குடிநீர் வசதி, சாய்வு தள வசதி மற்றும் சுகாதார வசதிகள் போன்ற கூடுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமானது. எனவே மேற்படி கட்டடத்தின் கூடுதல் வசதிகள் மேற்கொள்ள பொது நிதியின் கீழ் ரூ.23.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி ஒளிவு மறைவற்ற சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன்படி மின்னணு முறையில் (E-Tendering) முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மாமன்ற ஒப்புதலின் அடிப்படையில் திரு.S.ஜோசப் மைக்கேல் ராஜ் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைப்பெற்று வருகிறது.

4. ஒப்பந்தப்புள்ளி வரிசை எண்.43

மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் தெற்கு பகுதியில் வாகன நிறுத்தம் மற்றும் வாறுகால் அமைக்கும் பணிக்கு ரூ.15,20,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.214 நாள் 23.02.2024-ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி ஒளிவு மறைவற்ற சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன்படி மின்னணு முறையில் (E Tendering) 12.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அளித்துள்ள திரு.K.மணிகண்டன் (0.15% மதிப்பீட்டை விட குறைவு) ஒப்பந்ததாரருக்கு மாமன்ற தீர்மானம் எண்.423 நாள் 27.06.2024-இன்படி மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு 11.07.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. பின்னர் மேற்படி பணி 28.08.2024 அன்று முடிக்கப்பட்டுள்ளது.

5. ஒப்பந்தப்புள்ளி வரிசை எண்.44

வார்டு எண்.14 மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் கூடுதல் அபிவிருத்தி பணிகள் மற்றும் Aluminium Partition work பணிகள் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 12.03.2024 அன்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மானம் எண்.216 நாள் 23.02.2024-இன்படி மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன்படி மின்னணு முறையில் (E-Tendering) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.R.ஜெங்கின்ஸ் (1.29% மதிப்பீட்டை விட குறைவு) ஒப்பந்ததாரருக்கு 11.07.2024 அன்று மாமன்ற தீர்மானம் எண்.422 நாள் 27.06.2024-இன்படி ஒப்புதல் பெறப்பட்டு பணியாணை வழங்கப்பட்டது. புதிய மாநகராட்சி அலுவலக கட்டிடப்பணிகள் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் ICGF/O&M Gap filling fund 2018-19 மற்றும் பொது நிதியின் கீழ் கட்டிடப்பணிகள் மட்டும் முடிக்கப்பட்டுள்ளது. கூடுதலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகள் இதுநாள் வரை 80% பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைப்பெற்று வருகிறது.

மேற்படி அனைத்து பணிகளும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000-இன்படி சட்டத்திற்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் நடைப்பெற்றுள்ளது. இதனால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படவில்லை. மனுதாரர் வேண்டுமென்றே நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு நிர்வாக நடைமுறைகளை தவறாக சித்தரித்துள்ளார். பல மனுக்கள் கொடுத்து நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகத்திற்கு தேவையில்லாத அலைச்சலும், சங்கடமும் ஏற்படுத்தி வருகிறார். மேலும் இந்த மாமன்ற உறுப்பினரால் எழுப்பப்பட்ட புகார் மனு அடிப்படையில்லாதது ஆகும். எனவே மாண்புமிகு உள்ளாட்சி முறை மன்ற நடுவம் மேற்படி புகார் மனுவினை ஆராய்ந்து இவ்வறிக்கையினை ஏற்று புகார் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன். இப்பணி தொடர்புடைய இளநிலை பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளரின் அறிக்கையினையும் இத்துடன் அனுப்பியுள்ளேன் என தெரிவித்துள்ளார்.

5. இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.11.2024 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.10.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**6. மனுதாரர் திரு. எஸ்.வி. உதயகுமார் 06.11.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

நாகர்கோவில் மாநகராட்சியின் ஐந்தாவது வார்டு மாமன்ற உறுப்பினராக செயல்பட்டு வருகின்ற நான் இந்த மாமன்றம் கூடியதிலிருந்து மாநகராட்சியால் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீட்டுத் தொகையில் இருந்து ஒன்று அல்லது இரண்டு சதவீதங்கள் மட்டுமே குறைந்து ஒப்பந்தம் கேட்கப்பட்டதாக மாமன்ற அனுமதிக்கு வருகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் இருவர் மட்டுமே கலந்து கொண்டதாக பொறியியல் துறை மூலம் மாமன்றத்திற்கு தெரியப்படுத்தப்படுகிறது . இது இந்த மாநகராட்சியை பொருத்தவரை இயல்புக்கு மாறான ஒன்று. ஏனெனில் நான் இதற்கு முன்பு இது நகராட்சியாக இருந்த காலத்திலும் வார்டு மன்ற உறுப்பினராக செயல்பட்டபோது ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் போட்டியின் மூலம் 10 முதல் 20 சதவீதங்கள் வரை குறைத்து சென்றது. ஆனால் தற்பொழுது ஒப்பந்ததாரர்களுக்கு அரசியல் நெருக்கடி மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் விலைக்கு கொடுக்கப்படுகிறது. இதனை மறைமுகமாக மன்றத்திற்கு சுட்டிக்காட்டும் வகையில் நான் எழுத்து மூலம் அனைத்து மாமன்ற கூட்டத்திலும் என்னுடைய

எதிர்ப்பை பதிவு செய்து வந்தேன். இருந்தும் இன்று வரை எந்த பயனும் அளிக்கவில்லை. மாறாக தற்பொழுது மாநகராட்சியில் ஊழல் அளவுக்கு அதிகமாக மலிந்து விட்டது. அதற்கு இந்த ஆதாரங்களே சாட்சி.

1) இன்று மாநகராட்சியால் நடத்தப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்த அறிக்கையின் வரிசை எண்.13,21,22, 43 மற்றும் 44 ஆகிய ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளும் ஏற்கனவே எண்பது சதவீத பணிகள் முடிவடைந்து விட்டன.

2) வரிசை எண் 43–ல் உள்ள பணியை ஒப்பந்ததாரர் கே.மணிகண்டன் செய்துள்ளார்.

3) வரிசை எண்.13, 21, 22 மற்றும் 44ல் உள்ள பணியை செய்தது ஜோசப் மைக்கேல் ராஜ் மற்றும் Jenkins என்ற இவர்கள் இரண்டு பேரும் இன்று இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருகிறார்கள். ஆனால் ஏற்கனவே இதற்கான பணி முடிக்கப்பட்டன.

இம்மாநகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி பேரத்தின் அடிப்படையில் நடைபெறுவது மட்டுமல்லாமல் ஒப்பந்தம் போடுவதற்கு முன்பே ஒப்பந்தகாரர்களால் பணி செய்யப்பட்டுள்ளது. கடமையை செய்யும் எண்ணத்தில் மட்டும் ஒப்பந்தபுள்ளி கோரி வருகிறார்கள்.

ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் 7ஒப்பந்தப்புள்ளிகள் Code of Conduct Rule விதிமுறைகளை மீறி திறக்கப்பட்டுள்ளன. அவற்றின் மதிப்பீட்டு எண்.518/2023-24, 520/2023-24, 521/2023-24, 522/2023-24, 523/2023–24, 548/2023-24, 549/2023-24 அதையும் தங்களுக்கு தெரியப்படுத்துவதோடு அதை உறுதி செய்யும் விதமாக அதன் BOQ Sheet-ஐ இந்த கடிதத்தில் இணைத்துள்ளேன்.

ஒப்பந்தப்புள்ளிகள் செட் அப் செய்வதையும் 04.06.2024 அன்று Code of Conduct Rule முடிந்த பின்பு இந்த ஒப்பந்தப்புள்ளியில் யார் யாருக்கு செல்ல இருக்கின்றது என்பதை முன்கூட்டியே முடிவு செய்யப்படுகிறது. இதன் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் செட் அப் செய்வதை உறுதிப்படுத்தும் விதமாக தங்களுக்கு இந்த புகார் மனுவை சமர்ப்பிக்கிறேன். மேலும், 12.03.2024 அன்று வழங்கப்பட்ட புகார் மனுவில் ஒப்பந்தப்புள்ளிகள் செட்டப் செய்வதோடு மட்டுமல்லாமல் ஒரு ஒப்பந்தப்புள்ளிக்கு இருவர் மட்டும் ஒப்பந்தம் கோரி வருகிறார்கள். இது நாகர்கோவில் மாநகராட்சியின் முந்தைய கால கட்டங்களில் இல்லை என்பது ஆவணங்கள் மூலம் உறுதியாவதால் 12.03.2024 புகார் மனுவோடு இதனையும் இணைத்து விசாரிக்குமாறு வேண்டுகிறேன்.

குறிப்பு: Code of Conduct Rule விதிமுறையை மீறி Code of conduct அமலில் உள்ள காலத்திலேயே ஏழு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. அதில் நான் 12.03.2024 அன்று வழங்கிய புகார் கடிதத்தில் கூறிய 5 ஒப்பந்தப்புள்ளிகளில், ஒரு ஒப்பந்தப்புள்ளி 18.03.2024 அன்று திறக்கப்பட்டுள்ளது. அது நான் புகார் தெரிவித்த ஒப்பந்ததாரருக்கே வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் ஆதாரங்கள், புகைப்படங்கள் கூடிய மூன்று புத்தகங்கள். Vol. I, Page No.1 to 199B, Vol. II Page No.200 to 388, Vol.III Page No.389 to 499 இணைத்துள்ளேன். அதில் Vol. I புத்தகத்தில் பக்கம் 1 முதல் 7–L வரை எனது நிரூபண வாக்குமூலம் புத்தகத்தில் இணைத்துள்ளேன் என தெரிவித்துள்ளார்.

7. மேலும் மனுதாரர் தனது நிரூபண வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(1) டெண்டர் செட் அப்பை ஆதாரத்துடன் விளக்கும் விளக்கவுரை:

நாகர்கோவில் மாநகராட்சியில், ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும், மேயர் அவர்களுக்கு பணம் வழங்கும் ஒப்பந்ததாரர்களுக்கு, மதிப்பீட்டுத் தொகையில் இருந்து 0.01 என்று சிறிய மதிப்பீட்டு சதவிகிதத்தில் குறைத்து ஒப்பந்தப்பணி வழங்கப்படுகிறது. இதில் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்திற்கும் ஒப்பந்ததாரர்கள் இருவர் மட்டுமே கலந்து கொள்கிறார்கள். ஒப்பந்தப்புள்ளியின் Technical bid திறந்ததற்கான Acknowledgement card ஆதார புத்தகத்தில் உள்ளது. 24.05.2024 அன்று வழங்கிய புகார் மனுவுடன் இணைக்கப்பட்டது. மேலும், நாகர்கோவில் மாநகராட்சியில் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும், ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையில் இருந்து 0.01 என்று சிறிய மதிப்பீட்டு சதவிகிதத்தில் குறைத்து வழங்கப்பட்டுள்ளது. அதை உறுதிப்படுத்தும் விதமாக, இந்த பணிகளுக்கான மன்ற தீர்மான நகல்கள் ஆதார புத்தகத்தில் இணைத்துள்ளேன். மன்ற தீர்மானத்தில், ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கும் ஒப்பந்த பணிக்கான குறைவு, சதவிகித மதிப்பீட்டில் உள்ளதால், அதுவும் இணைக்கப்பட்டுள்ளது. இந்த இரு செயல்களும், நாகர்கோவில் மாநகராட்சியில் நடைமுறைக்கு மாறான ஒன்று. இதை உறுதிப்படுத்தும் விதமாக, முந்தைய காலகட்டங்களில் 2021 முடிய மாமன்றம் கூடுவதற்கு முந்தைய கால கட்டங்களில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்டு, ஒப்பந்தம் கேட்ட ஒப்பந்ததாரர்களின் பணிக்கான விபரம், குறைவு சதவிகிதம் அடங்கிய, மன்ற தீர்மானம் ஆதார புத்தகத்தில் உள்ளது. இதில் உள்ள அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும், சுமார் 20% மதிப்பீட்டு தொகையில் இருந்து குறைவாக வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பணிக்கும், பல ஒப்பந்ததாரர்கள் கலந்துள்ளதோடு, குறைவான மதிப்பீடு கொடுக்கப்பட்டவருக்கே, பணி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிர்மறையாக தற்போது நடப்பதால், அதை உறுதிபடுத்த தங்களுக்கு 12.03.2024 அன்று வழங்கிய புகாருடன், ஒப்பந்தப்புள்ளி அறிக்கை ந.கா.எண்.E1/2433/2024 ஆதார புத்தகத்தில் இணைத்துள்ளேன். அதை சுட்டிக்காட்டி, அதில் இணையதளம் மூலம் ஒப்பந்தம் கேட்கப்பட்ட 44 பணிகளில், ஐந்து பணிகள் ஏற்கனவே 80 சதவீதம் முடிவடைந்து இருந்தது. அதற்கான புகைப்பட ஆதாரங்கள் ஒன்றின்பின் ஒன்றாக பணிகளின் பெயர்களை குறிப்பிட்டு, எனது முந்தைய புகாருடன் இணைத்து உள்ளேன். மேலும் விடுபட்ட சில புகைப்படங்களையும் தற்போது இணைத்துள்ளேன். மேலும் முந்தைய காலத்தை கருத்தில் கொண்டு ஒப்பந்ததாரர்களிடம் விலை குறைப்பு வேண்டி கடிதம் ஏதும் மாநகராட்சியால் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கவில்லை. போட்டி இல்லாத (Single tender) மறு ஒப்பந்தப்பணிகளுக்கு கோரவில்லை. இணையதளத்தின் மூலம் பணி கிடைத்தால் மறு ஒப்பந்தப்புள்ளியோ, விலை குறைப்போ மாநகராட்சி பெற முன்வரவில்லை. ஒப்பந்தப்புள்ளி அறிக்கை ந.கா.எண்.E1/2433/2024-ல் உள்ள 44 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும், Technical Bid-ஐ பொறியியல் துறை 16.03.2024 அன்று திறந்துள்ளது. அதற்கான Acknowldegement எனது 24.05.2024 தேதிய புகாரில் இணைக்கப்பட்டுள்ளது. தேர்தல் நடைவிதிமுறைகள்(Code of Conduct Rule)அமலில் இருந்ததால், விலை விகிதத்தை (Price Bid) பொறியியல் துறை 10.06.2024 அன்று இணையதளம் மூலம் பணி ஒதுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் குறித்து அறிவித்துள்ளது.

(2) 24.05.2024 அன்று சமர்பித்த புகாரில் நாகர்கோவில் மாநகராட்சி பொறியியல் துறை 13.03.2024 அன்று சென்றபோது ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பந்ததாரருக்கு ஒதுக்கி அவர்களின் பெயர்கள் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் எழுதப்பட்டிருந்தது. மாநகராட்சி வரைவாளரிடம் டெண்டர் நோட்டீஸ் (ஒப்பந்த அறிக்கையை) தருமாறு வேண்டினேன். எனது வேண்டுகோளை ஏற்று அவர் வழங்கியதை என்னுடைய தொலைபேசியில் புகைப்படம் எடுத்து அதன் நகல்களையும் இணைத்துள்ளேன். 24.05.2024 புகாருடன் இணைக்கப்பட்டுள்ள புகைப்படத்தில் எழுதப்பட்டிருந்த ஒப்பந்ததாரர்களின்

பெயர்களிலேயே ஒப்பந்த பணிகள் வழங்கப்பட்டுள்ளது. இப்புகாரில் குறிப்பிட்டிருந்த டேவிட் வறுவேல் ஆன்டனிமைக்கேல் என்ற ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டதை தெரிவித்திருந்தேன். தற்போது இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தபோது L2வாக குறிப்பிட்டிருந்த ஜோசப் அருள்ராஜ் என்பவருக்கு பணி வழங்கப்பட்டுள்ளது. இவர் டேவிட்வறுவேல் ஆன்டனிமைக்கேல் என்பவரின் உடன் பிறந்த சகோதரர் ஆவார்.

எனது இரு புகார்களிலும் குறிப்பிட்டு இருந்தது போல் 44 பணிகளில் 2 பணிகளுக்கு யாரும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ளவில்லை. 41 பணிகளுக்கு மட்டும் நான் குறிப்பிட்டிருந்த நபர்களுக்கு வழங்கப்பட்டது. ஒரு பணிக்கு மட்டும் ஒப்பந்ததாரர்களின் உறவினர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து நாகர்கோவில் மாநகராட்சி பணிகளுக்கு டெண்டர் செட்அப் நடைபெறுவதை ஆவணங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். பணிகள் நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தவிதிகள் சட்டத்தை மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள், பொறியியல் துறையினர் மற்றும் மேயர் கடைப்பிடிக்காமல் சுய லாபத்திற்காக அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி ஒப்பந்த சட்டத்தை தவறாக செயல்படுத்தி ஒப்பந்தப்புள்ளிகளை பெற்றது போன்று ஆவணங்களை உருவாக்கி பணி நடைபெறுவதற்கு முன்பு டெண்டர் கோராது ஒப்பந்ததாரர்களை செட்அப் செய்து மாநகராட்சி நிதியினை கையாடல் செய்து பலகோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டப்படுகிறது. 44 ஒப்பந்தப்பணிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்த பணிகள் பெற்ற ஒப்பந்ததாரர் அனைவருக்கும் L2 ஒப்பந்ததாரர்கள் ஒரே ஒப்பந்ததாரர்களே ஆவார்கள்.

(3) குற்றச்சாட்டுக்கு உரிய 44 பணிக்கான மன்ற தீர்மான பக்கத்தை இணைத்து பார்த்த போது 2021 காலக்கட்டத்தில் பெறப்பட்ட அனைத்து ஒப்பந்த பணியும் மதிப்பீட்டை விட சுமார் 20% குறைந்து சென்றுள்ளது. மேலும் சிங்கல் டெண்டர் கூட 10 முதல் 20 சதவிகிதம் வரை குறைந்துள்ளது. L2 சராசரியாக 15% மேல் குறைந்துள்ளது. L2 எதுவும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக இல்லை. 3 ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் சிங்கல் டெண்டராக மதிப்பீட்டு தொகையிலிருந்து சிறிய சதவிகிதம் குறைந்துள்ளது. அனைத்து ஒப்பந்த பணிகளிலும் 3லிருந்து 7 ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்பணி கேட்டுள்ளார்கள். குற்றச்சாட்டுக்குரிய 44 பணிகளுக்கும் இருவர் மட்டுமே ஒவ்வொரு பணிக்கும் ஒப்பந்தம் கேட்டுள்ளார்கள். மூன்று பணிகளை தவிர மீதமுள்ள அனைத்து பணிகளும் L1ஒப்பந்ததாரர் குற்றச்சாட்டில் கூறியபடி மதிப்பீட்டை விட குறைந்த அளவிலும் L2 ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட கூடுதலாகவும் ஒப்பந்தம் கேட்டுள்ளார். குற்றச்சாட்டு கடிதத்தில் 44 பணிகளில் 3 பணிகளுக்கு மட்டும் L2 மதிப்பீட்டை சிறிய அளவு குறைத்து மூன்று பணிகளுக்கு ஒப்பந்தம் கேட்ட ஒப்பந்ததாரர் :P.C ஆன்றனி மரிய கிரேட்டஸ் L2, இதில் ஜெங்கின்ஸ் L1ஆகும். 44 பணிகளிலும் யார் எல்லாம் ஒப்பந்ததாரர்களாக கலந்துகொண்டார்களோ அவர்களில் பலர் 2021ல் டெண்டர் நடந்த காலத்தில் இயல்பாக ஒப்பந்தப் பணி செய்தவர்கள். அவர்கள் எந்த இடத்திலேயும் Negotiation-னும் நாகர்கோவில் மாநகராட்சியில் பெறவில்லை. ஒப்பந்த மதிப்பீட்டின் தொகையைவிட குறைத்து ஒப்பந்தம் வழங்க அரசியல் அழுத்தம் காணப்பட்டது. இந்த வேறுபாடுகளில் காரணமாக Tender Setupஐ உறுதி செய்கிறேன்.

(4) ஒப்பந்த நிபந்தனைபடி, ஒப்பந்தபணி இணையத்தின் மூலம் கேட்கப்படாததை ஆதாரத்துடன் உறுதிப்படுத்தும் விளக்கம்.

தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள் 2000–ன்படி இரண்டு கோடி மதிப்பு வரை உள்ள ஒப்பந்த பணிக்கு குறைந்தபட்சம் ஒப்பந்தம் கேட்க 15 நாட்கள் கால அவகாசம் ஆகும். நாகர்கோவில் மாநகராட்சி இணையத்தின் மூலம் ஒப்பந்தம் கேட்டு பெறுகிறது. ஆனால் குற்றச்சாட்டு கடிதத்தில் 44 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கால அவகாசம் 4 நாட்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பணிக்கும் எத்தனை நாட்கள் என்பதையும் குறிப்பிட்டுள்ளேன். ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தத்தை இணையதளத்தில் கேட்டால் போதும் என்ற நிலையில் நாகர்கோவில் மாநகராட்சி ஊழியர்கள் நினைப்பதால் இந்த விதியை கடைபிடிப்பதில்லை. 44 பணி அடங்கிய ஒப்பந்த அறிக்கையில் 27.02.2024 அன்று கையெப்பம் இட்டதாக உள்ளது. ஆதார ஒப்பந்தத்தை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தால் 10 நாட்கள் கால அவகாசம் இருக்கும். ஆனால் பொறியியல் துறை வரைவாளர் அதனை செயல்படுத்தவில்லை. இந்த குற்றச்சாட்டை ஆதாரத்துடன் உறுதிபடுத்தியதால் பொறியியல் துறை ஊழியர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(5) ஒப்பந்த பணிகள் ஒப்பந்த நிபந்தனைப்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் விளக்கங்கள்.

தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகள் எதுவும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படவில்லை. 44 பணிகளுக்கு இரு உறை (Two cover system) ஒப்பந்தப்புள்ளி இதனையும் (tender upload details) இணைத்துள்ளேன். ஒப்பந்த நிபந்தனைப்படி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு ஒப்பந்த தொகையில் 50% பணியை ஒரே பணியாக (Single Agreement)-ல் செய்திருக்க வேண்டும். மேலும் ஒப்பந்ததாரர் எந்த ஒப்பந்தத்தை கேட்கிறாரோ அந்த பணியில் (உதாரணம் தார்சாலை என்றால் 50% சாலை பணி செய்திருக்கவேண்டும்) ஒவ்வொரு ஒப்பந்தப்பணிக்கும், ஒப்பந்த நிபந்தனைகள் உள்ளது. மேலும், ஒப்பந்ததாரரின் பண இருப்பு விவரங்களுக்கு வங்கி கேரண்டி சர்டிபிகேட் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் கடந்த 3 ஆண்டுகளில், ஒப்பந்ததாரரால், நடைமுறைப்படுத்திய பணிகளின் முழு விளக்கங்கள் அடங்கிய, ஆடிட் பேலன்ஸ் சீட், போன்ற ஆவணங்களை சமர்ப்பிப்பது முக்கியமானதாகும். இவைகள் எதையுமே நாகர்கோவில் மாநகராட்சி பெறாமல், தங்களுக்கு வேண்டிய ஒப்பந்ததாரருக்கு மட்டுமே, ஒப்பந்த பணி வழங்கப்பட்டுள்ளது. இதற்குகாரணம் Tender Setup ஆகும்.

(6) மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுக்காமல் Negotiation மூலம் தேர்வு மதிப்பீட்டு எண்கள் 240/2021–2022, 241/2021–2022, 242/2021–2022, பணிக்கு ஜெங்கின்ஸ் ஒப்பந்ததாரர் 0.10, 0.06, 5.33 சதவிகிதத்தில் பணியை கேட்டு L2 வாக இருந்தார். அலுவலகத்தில் உள்ள அலங்கார பணிக்கு அதற்கு பொறியியல் துறை Negotiation கடிதம் மூலம் L1 ஒப்பந்ததாரர்கள் வழங்கியிருந்த அதே விலையை ஜெங்கின்ஸ்யிடம் Negotiation மூலம் குறைத்து பெற்று பணியை ஜெங்கின்ஸ்–ற்கு வழங்கியது. Negotiation என்பது L1ஒப்பந்ததாரர்கள் வழங்கும் மதிப்பீட்டு தொகையை விட L1ஒப்பந்ததாரரின் முந்தைய சதவிகித மதிப்பை கருத்தில் கொண்டு பொறியாளர் மதிப்பீட்டு சதவிகிதத்தை குறைத்து கேட்பதற்கான முறையாகும். ஆனால் இந்த பணிகளில் பொறியியல் துறை தனக்கு வழங்கப்பட்ட Negotiation அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுத்துள்ளது. 3 பணிகளும் இந்த மாமன்றம் கூடிய ஆரம்ப காலத்தில் ஒப்பந்தம் கேட்கப்பட்டது. இந்த மூன்று பணிகளும் ஜெங்கின்ஸ்–ற்கு வழங்கப்பட்ட பணியை வேறு நபர்கள் ஒப்பந்தம் கேட்டதால் பணியை ஜெங்கின்ஸ்–ற்கு வழங்குவதற்காக பொறியியல் துறை விதி முறையை மீறி Negotiation கேட்டு L1 ஒப்பந்ததாரர்கள் சதவீத மதிப்பில் விலை விகிதத்தை Negotiation மூலம் பெற்று ஒப்பந்ததாரரை ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் நிர்ணயிக்காமல் Negotiation முறையில் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி தீர்மானித்துள்ளது. இது டெண்டர் Setupக்கு மிக சிறந்த ஆதாரமாகும். இதில் L1அசோக்குமார், பால்பாண்டியன் ஆகும். ஒப்பந்ததாரர்கள் இணையத்தில் ஒப்பந்தம் கேட்டாலும் பொறியியல் துறை விருப்பமுள்ளவர்களுக்கே பணி வழங்கும் என்பதற்கு இந்த மூன்று ஒப்பந்த பணிகளையும் ஆதாரமாக வைக்கிறேன். பொறியியல்துறை ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கு மன்ற தீர்மானத்தில் கூறிய காரணம் என்னை மனவேதனைபடுத்தியது. வரைபடம் போன்ற ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை என்பதால் L1

ஒப்பந்ததாரர்கள் நிராகரிக்கப்பட்டதாக கூறுகிறது. வரைபடம் இருந்தால் தான் மதிப்பீட்டு தொகை நிர்ணயிக்க முடியும். வரைபடம் உருவாக்குவது பொறியியல் துறையின் கடமை. இந்த மூன்று பணிகளுக்கும் ஒப்பந்த நிபந்தனை எதுவும் இணையத்தில் கேட்கவில்லை. அவ்வாறு பொறியியல் துறை இணையத்தில் ஒப்பந்த நிபந்தனை கேட்டிருந்தால் Technical Bid-ஐ இணையத்தில் திறக்கும் போதே தகுதியில்லாத ஒப்பந்ததாரரை தகுதி நீக்கம் செய்து இருக்கலாம். அவ்வாறு தகுதி நீக்கம் செய்து இருந்தால் அசோக்குமார், பால்பாண்டியன் ஆகியோர் price bid-ல் L1 ஆக வந்திருக்க மாட்டார்கள். Technical Bid–ஐ இணையத்தில் ஏற்றுக் கொண்டதற்கான ஆதாரமும் உள்ளது. எனவே இந்த மூன்று பணிகளில் தொடர்புடைய அதிகாரிகள் மீது, ஒப்பந்ததாரர்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

(7) Code of Conduct விதிமுறையை மீறி ஒப்பந்த பணியை இணையத்தில் திறந்ததை ஆவணங்களுடன் உறுதிபடுத்தும் குற்றச்சாட்டு.

ஒப்பந்தப்புள்ளி இணையத்தில் திறப்பதற்கான நிபந்தனைகள்படி இந்த பணிகளுக்கான ஒப்பந்ததாரர் யார் என்பதை 10.06.2024–ல் இணையத்தின் மூலம் தான் அறிய முடியும். 12.03.2024 அன்று வழங்கிய எனது புகார் மனுவில் 5 ஒப்பந்த பணிகளின் வேலை உத்தரவு வழங்காமல் Tender Setup செய்யும் ஒப்பந்ததாரர்களின் முழு விவரங்களையும், டெண்டர் ஏற்றுக்கொள்வதற்கு முன்பாகவே தெரியப்படுத்தியுள்ளேன். தற்போது அதே ஒப்பந்ததாரர்களுக்குத்தான் அப்பணிகள் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆதாரங்கள் மூலம் எனது குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படுகிறது. மேலும் (Code of Conduct Rule) தேர்தல் நடத்தை விதி 16.03.2024 அன்று மதியம் 3 மணிக்கு அமல் படுத்தப்பட்டு 06.06.2024 அன்று முடிவடைந்தது. நான் 12.03.2024 அன்று வழங்கிய புகாரில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த பணிகளில் 1 பணி மட்டும், தேர்தல் நடத்தை விதிமுறையை மீறி 18.03.2024 அன்று திறக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டுள்ளேன். 24.05.2024 அன்று வழங்கிய எனது புகாரில் 6 பணிகள் தேர்தல் நடத்தை விதிமுறையை மீறி 18.03.2024 அன்று திறக்கப்பட்டுள்ள விவரத்தையும் தெரிவித்துள்ளேன்.

(8) Lead of cost முறைப்படி விலை நிர்ணயம் செய்யாததை ஆதாரத்துடன் விளக்கும் குற்றச்சாட்டு.

12.03.2024 மற்றும் 24.05.2024 ஆகிய இரு தேதிகளில் குறிப்பிட்ட அனைத்து பணிகளிலும் Schedule of rate ஆனது ஒரே மதிப்பில் உள்ளது. அரசானது குவாரியில் கிடைக்கும் பொருட்களின் விலையை நிர்ணயிக்கும். அது குவாரியில் இருந்து பணி செய்யும் இடத்திற்கு வண்டி மூலம் கடத்தி செல்ல Lead of cost பொறியியல் துறை நிர்ணயித்து, அதன் மொத்த விலையை நிர்ணயிக்கும். நாகர்கோவில் மாநகராட்சியில் அனைத்து வார்டுகளில் நடக்கும் பணிக்கும் ஒரே Lead of cost பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக மதிப்பீட்டு எண். 515/2023–24 பணிக்கு வரிசை எண்.2ல் 1:4:8-ற்கு ரூ.4,783/– வழங்கப்பட்டுள்ளது. வார்டு எண்.46 வண்ணான்விளை, மதிப்பீட்டு எண்.553/2023–24 பணிக்கு வரிசை எண்.2–ல் 1:4:8 குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் தொகையும் ரூ4,783/–ஆகும். இந்த இரண்டு பணிகளின் தொலைவும் சுமார் 5 கிலோ மீட்டராகும். ஆனால் பணிக்கு ஒரே விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் நாகர்கோவில் மாநகராட்சியின் செயல்பாடற்ற தன்மை தெரியவருகிறது. இதில் தொடர்புடைய பொறியியல் துறை அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

(9) ஒரே Data–விற்கு வெவ்வேறு விலை நிர்ணயம் செய்ததை ஆதாரத்துடன் விளக்கும் குற்றச்சாட்டு.

12.03.2024 அன்று வழங்கிய புகார் மனுவில் குற்றச்சாட்டு கூறிய 5 பணிகளில் மதிப்பீட்டு எண்.531/2023–24, 523/2023–24, 553/2023–24 ஆகிய பணிகளில் 531/2023–24 பணிக்கு வரிசை

எண்.19–ல் குறிப்பிட்டுள்ள Gypsum False Ceiling பணிக்கு ரூ.1100/– வழங்கப்பட்டுள்ளது. இதே பணியானது மதிப்பீட்டு எண்.523/2023–24 பணியிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் மதிப்பீட்டு தொகை ரூ.1700/– என குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு பணிகளுக்கும் ஒரே Data-வே உள்ளது.

(10) பயன்படுத்தாத பொருளை ஒப்பந்தப்புள்ளியில் இணைத்து பணம் கையாடல் செய்ய திட்டமிடல்.

மதிப்பீட்டு எண்.553/2023–24 பணிக்கு Wetmix Macadam பயன்படுத்த ஒப்பந்தத்தில் உள்ளது. தற்சமயம் பணி நிறைவடைந்து விட்டது. அதில் Wetmix ஏதும் பணி நடைபெற்ற இடத்தில் பயன்படுத்தவில்லை. எனவே, இந்த பணியை முறையாக லஞ்ச ஒழிப்புத் துறை மூலம் ஆய்வு செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

(11) Schedule of Rate-ல் இல்லாத விலைப்புள்ளியின் விலையை ஆய்வு செய்ய லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவு வேண்டி.

554/2023–24 பணிக்கு Schedule of Rateல் இல்லாத பல பணிகள் நடைபெற்று உள்ளன. Schedule of Rate என்பது அரசால் விலை நிர்ணயம் செய்த பொருட்கள் விலை விகிதம் ஆகும். அவ்வாறு அரசால் விலை நிர்ணயம் செய்யாத பொருட்களின் விலை அறிய பொறியியல் துறையானது தேவையான பொருட்களை விற்பனை செய்யும் கடைகளில் இருந்து விலைப்பட்டியல் பெற வேண்டும். குறைந்தது மூன்று விலைப்பட்டியல் பெற்றும் அதில் குறைந்த தொகையை ஒப்பந்ததாரருக்கு விலை மதிப்பாக வழங்க வேண்டும். 554/2023–24 பணியில் மாமன்ற கூட்ட அரங்கிற்கு வாங்கப்பட்ட இரண்டு Curtain–ற்கு ரூ.90,000/– வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் இதில் குறிப்பிடப்பட்டுள்ள பல பணிகளுக்கு விலையானது சந்தை மதிப்பை விட அதிகமாக உள்ளது. எனவே இந்த விலை வழங்கியதாக கூறப்படும் கடைகள் அனைத்தும், உண்மையில் உள்ளதா இல்லை போலியான முகவரியில் லெட்டர்பேடுகளை உருவாக்கி கோப்பில் வைக்கப்பட்டுள்ளதா என்பதையும் விலை விகிதத்தையும் முறையாக ஆய்வு செய்ய உத்தரவு வேண்டும். மேலும் மாமன்றம் புதிய கட்டிடத்தில் மார்ச் 2023ஆம் ஆண்டே தொடங்கிவிட்டது. அப்போதே இந்த பணியில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மாமன்ற கூட்ட அரங்கில் உள்ளது. 2023ஆம் ஆண்டு முடிந்த பணிக்கு தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரியது எதற்கு என்பது தெரியவில்லை. எனவே இந்த கோப்பில் தொடர்புடைய பொறியியல் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க உத்தர விடுமாறு வேண்டப்படுகிறது.

மாமன்ற கூட்ட அரங்கில் Curtain மற்றும் நாகர்கோவில் மாநகராட்சி Logo இருப்பதற்கான வீடியோ ஆதாரம் Pen Drive மூலம் தங்களுக்கு ஆவணமாக வழங்கப்படுகிறது. அப்போதைய ஆணையர் திரு.ஆனந்தமோகன்,I.A.S அவர்கள் அமர்ந்து கூட்டம் நடத்தும் ஆதாரம் சமர்ப்பிக்கப்படுகிறது. இதன் மூலம் ஊழல் குற்றச்சாட்டு மற்றும் Tender Setup நிரூபிக்கப்பட்டுள்ளது. இதற்கு மதிப்பீடு தயாரித்த பொறியியல் துறை A.E மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

(12) தார் சாலையின் கன அளவு மற்றும் தாரின் அளவை கண்டறிய சோதனைக்கு உத்தரவு வேண்டி.

பணிகள் தரமானதாக இல்லை என்பதற்கான புகைப்படங்கள் மற்றும் காம்பேக்ட் திக்னஸ் இல்லை என்பதற்கான புகைப்படமும் இணைக்கப்பட்டுள்ளது. இவைகளில் பல எனது வார்டு எண்.5ல் என் கண்களுக்கு புலப்பட்ட தரமற்ற சாலை பணிக்கான புகைப்படங்கள் ஆகும் என்பதால் அவைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாகர்கோவில் மாநகராட்சியில் தற்போதைய மாமன்றம் கூடிய நாளிலிருந்து, மன்ற அனுமதி பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும், தரம் மற்றும் கன அளவு

(Thickness) குறைவாக போடப்பட்டு இருப்பதால், அனைத்து பணிகளையும் வல்லுநர் மூலம் ஆய்வு செய்வதற்கு, உரிய புலன் ஆய்வு துறைக்கு உத்தரவிடுமாறு வேண்டுகிறேன். பலநூறு கோடி ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதால், மத்திய குற்றப்புலனாய்வுத் துறை விசாரித்தால் மட்டுமே உண்மையினை வெளி கொண்டுவர முடியும். மாமன்றம் கூடிய காலக்கட்டத்திலிருந்து, இன்றுவரை சுமார் ரூ.300/– கோடிகள் வரை ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, பணிகள் நடைபெற்று உள்ளது. அப்பணிகள் அனைத்துமே, ஒப்பந்தப்புள்ளிகள் Setup செய்து, இதே போல் இருவர் மட்டுமே கலந்துள்ளதோடு, பணிகள் அனைத்தும் மதிப்பீட்டு தொகைக்கு வழங்கப்பட்டுள்ளது. நிதி இழப்பு ஏற்படுத்தி, ஊழல் புரிந்த மாநகராட்சி மேயர், ஆளும்கட்சி மாவட்ட செயலாளர் என்பதாலும், அதிகாரத்தில் இருக்கும் மேயர் என்பதாலும், மாநில குற்றப்புலனாய்வுத் துறையினர் முறையாக விசாரணை செய்வதில் தயக்கம் காட்டுவர். இதனால் புலன் விசாரணை காலதாமதம் ஆகும். தற்பொழுதும் அளவுக்கு அதிகமான டெண்டர் செட் அப் நடப்பதால் அளவுக்கு அதிகமாக வருவாய் இழப்பு ஏற்படும்.

மேலும் நடைபெற்ற ஒப்பந்த பணிகளில், தரக்குறைபாடு எவ்வாறு நடைபெறுகிறது என்றால் நாகர்கோவில் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட தார் சாலைகள் அனைத்தும் ஒப்பந்தத்தில் கூறியபடி Compact செய்யப்படவில்லை. அனைத்து பணிகளையும் ஆய்வு செய்து தார் சாலை மாதிரிகள் வெட்டி எடுக்கப்பட்டு அவற்றின் எடைகளை கணக்கீடு மேற்கொள்ளப்பட்டால், நிதி இழப்பினையும், தரக்குறைவையும் உறுதிப்படுத்த முடியும். மேலும் எவ்வளவு வெட்டி எடுக்கப்பட்டு அதிலிருந்து தார் அப்புறப்படுத்தி ஜல்லியின் எடையை கணக்கிட்டு, தாரின் (Bituman) எடையை தீர்மானிக்க வேண்டும். இந்த பணிகளை முறையாக ஆய்வு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட நெடுஞ்சாலைத் துறை ஆய்வு கூடங்களுக்கு அனுப்ப பரிந்துரைப்பதோடு அந்த ஆய்வுகளின் மாதிரிகளை வெட்டி எடுக்கும் Video-வினை பதிவேற்றம் செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாகும்.'

(13) GST மூலம் அரசுக்கு வருவாய் இழப்பீடு ஒப்பந்ததாரர்களால் ஏற்படுவதை விளக்கும் உரை.

ஒப்பந்த பணிகள் அனைத்தும், சரக்கு மற்றும் சேவை வரிக்கு உட்பட்டு இருப்பதால், ஒப்பந்ததாரர்கள், தங்கள் பெயரில் மாநகராட்சியால் வழங்கப்படும் சரக்கு மற்றும் சேவைக்கான தொகைக்கு, எவ்வளவு தார், சிமெண்ட், மணல், ஜல்லி ஆகியவை பயன்படுத்தினார்களோ, அதற்கான சரக்கு மற்றும் சேவை வரியை தங்களுடைய சரக்கு மற்றும் சேவை வரி கணக்கில் முறையாக கணக்கு காட்டி இருப்பார்கள். அவைகளை சரக்கு மற்றும் சேவை வரி துறையின் உதவியோடு தணிக்கைக்கு உட்படுத்தவும், உத்தரவு பிறப்பிக்க வேண்டப்படுகிறது.

(14) திட்ட பணிகளை ஆய்வு செய்ய போதிய பணி ஆய்வாளர்கள் இல்லாத குற்றச்சாட்டு.

நாகர்கோவில் மாநகராட்சியில் பணிகளை மேற்பார்வையிட பொறியியல் துறையில் 52 வார்டுகளுக்கும், இரண்டு பணி ஆய்வாளர்கள் (Work Inspector) மட்டுமே உள்ளனர். ஆனால் பொறியாளர்கள் ஏழு பேர் உள்ளனர். ஒரு பொறியாளருக்கு உதவியாக, ஒரு பணி ஆய்வாளர் கூட வழங்கப்படவில்லை. இதனை தற்காலிக பணி அடிப்படையில் கூட, மாமன்றம் நிரப்ப முன்வரவில்லை. ஒப்பந்ததாரர் தகுதியில் ரூ.30 லட்சம் பணிக்கே இரு பணி ஆய்வாளர்கள் ஒப்பந்ததாரர்களுக்கு வேண்டும் என ஒப்பந்த நிபந்தனையில் உள்ளது. ஆனால் அனைத்து வார்டுகளிலும், ரூபாய் 300/– கோடி பணிகள் நடைபெற்று வருகின்றன. எந்த பணி நடக்கும்போதும் அதனை கண்காணிக்க, பணி ஆய்வாளர்களும், மேற்பார்வையாளர்களும் இல்லாமல், பணிகள் நடைபெறுவதால், பணிகள் தரமற்ற முறையில் நடைபெறுகின்றன. இவை நாகர்கோவில் மாநகராட்சியில் அதிகார துஷ்பிரயோக மற்றும் செயல்பாடு அற்ற நிர்வாகம் நடைபெறுவதை வெளிப்படுத்துகிறது. பணியாளர்கள் நிரப்ப உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

(15) ஒப்பந்தப்புள்ளிகளை Tender Setup செய்வதால் வருவாய் இழப்பீடு ஏற்படுவதை உறுதி படுத்தும் ஆவணங்கள்.

ஒப்பந்தப்புள்ளிகளை, மேயருக்கும், அதிகாரிக்கும் பணம் கொடுத்தவர்களுக்கும், தனக்கு விருப்பமானவர்களுக்கும் வழங்கியதோடு, அத்தகைய சட்ட விரோத செயல்களில் ஈடுபட்ட மேயர், அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் இணைந்து கூட்டு சதி செய்ததினால் நாகர்கோவில் மாநகராட்சிக்கு பல கோடி ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. அதனை உறுதி படுத்தும் விதமாக, சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21ன் கீழ் ரூ.10,00,00,000 (பத்து கோடி)க்கு பணி 2021ல் நடைபெற்றுள்ளது. அதில் 21.10% மதிப்பீட்டு தொகையில் இருந்து குறைவான டெண்டர் கேட்டவருக்கே பணி ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சேமிக்கப்பட்ட தொகையினை, வேறு பணிகள் செய்வதற்கு மன்றத்தில் பொருள் வைக்கப்பட்டு, அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 07.07.2021 அன்று உயர் கோபுரம், மின் விளக்கு மற்றும் புத்தேரி மேம்பால தெருவிளக்கு ஓராண்டு பராமரிப்பிற்கு.2 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் கேட்கப்பட்டது. அதில் ஏழு ஒப்பந்ததாரர்கள் கலந்துள்ளனர். அந்த பணிக்கு மதிப்பீட்டு தொகையில் இருந்து 25.12 சதவிகிதம் குறைத்து பணி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

(16) நாகர்கோவில் மாநகராட்சி ஊழியர்களை இட மாற்றம் செய்வதற்கான காரணங்கள்.

நாகர்கோவில் மாநகராட்சியால் மாமன்றம் கூடிய நாட்களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும், டெண்டர் செட் அப் செய்வதற்கு, நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரியும் அதிகாரிகளும், முக்கிய பங்குவகித்துள்ளனர். இதற்கு காரணம், நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரியும் அதிகாரிகள் அனைவருமே, குமரி மாவட்டத்தையே சொந்த ஊராக கொண்டவர்கள். மேலும் 98 சதவிகிதம் அதிகாரிகள், இதே அலுவலகத்தில் பணியில் சேர்ந்த நாள் முதல், இது நாள்வரை, பல ஆண்டுகள் பணியாற்றி வருபவர்கள் ஆகும். நாகர்கோவில் மாநகராட்சி டெண்டர் செட் அப்பை நிறுத்துவதற்கு, பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத்துறை அரசாணை (நிலை) எண்.10 தேதி 07.01.1994ன்படி மூன்று வருடங்களுக்கு மேல் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் இடமாற்றம் செய்வதோடு, ஏற்கனவே பணிபுரிந்த அதிகாரிகளை, இதே அலுவலகத்திற்கு திரும்ப பணியில் அமர்த்தாமல் இருக்க நகராட்சி நிர்வாகத்துறைக்கு உத்தரவு பிறப்பிக்கவேண்டியது அவசியமாகும். நாகர்கோவில் மாநகராட்சியில் முறையற்ற நியமனங்களால், நாகர்கோவில் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவதோடு, அவர்கள் மூலமாகவே, சட்ட விரோத பணிகளும் நடைமுறைபடுத்தப்படுகிறது. உதாரணமாக, கண்காணிப்பாளர் பணியில் இருக்கும் ஊழியர்கள் பலர், உதவியாளர் பணிக்கு அமர்த்தப்பட்டு கண்காணிப்பாளர் சம்பளம் வாங்குகிறார்கள். அதை சுட்டிக் காட்டி நான் அனுப்பிய புகார் இணைக்கப்பட்டுள்ளது.

(17) பொது நிதியில் மேற்கொள்ளும் ஒப்பந்த பணிக்கு ஒப்பந்ததாரர்களிடம் இலஞ்சம் பெறும் முறை மற்றும் அதற்கு உடந்தையாக அதிகாரிகள்.

நாகர்கோவில் மாநகராட்சியின், பொது நிதியில் நடைபெறும் அனைத்து பணிகளுக்கும், பணிமுடிந்து, காசோலையை, தற்போது இளநிலை உதவியாளர் ஜெகதீஸ் அவர்கள் ஒப்பந்ததாரருக்கு வழங்குவார். அப்போது மேயரின் உதவியாளர் இலட்சுமணனை இளநிலை உதவியாளர் ஜெகதீஸ் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, காசோலை வழங்கப்படுகின்ற ஒப்பந்ததாரரின் பெயரை தெரிவித்து, காசோலை வழங்கவிருக்கின்ற தகவலை தெரிவிப்பார். இளநிலை உதவியாளர் ஜெகதீஸின் தகவலின் பேரில், 20% இலஞ்சத் தொகையை மேயர் அல்லது மேயரின் உதவியாளர் இலட்சுமணனிடம் ஒப்பந்ததாரர்கள் வழங்கிய பின்னரே காசோலை வழங்கப்படும். இதுவே இந்நாள் வரை நடைபெற்று வரும் நடைமுறையாகும்.

எனவே பொது நிதியில் நடைபெற்ற பணிகளில் எந்த தேதியில் காசோலை வழங்கப்பட்டு, ஒப்பந்ததாரரின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதோ, அந்த தேதியில் மேயர் மற்றும் மேயரின் உதவியாளர் இலட்சுமணனுக்கு ஜெகதீஸ் எத்தனை முறை போன் மூலம் தொடர்பு கொண்டுள்ளார்கள் என்பதை உறுதி செய்து, ஜெகதீஸ் மற்றும் மேயர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

(18) ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும், மின்னணு மூலம் இணையத்தில் பதிவேற்றம் செய்வதற்கு, நாகர்கோவில் மாநகராட்சி அனுமதி வழங்கியும், அரசியல் நெருக்கடி காரணமாக, ஒப்பந்ததாரர்கள், மேயருக்கு அடிபணிந்து அவரின் சட்ட விரோத செயலுக்கு உறுதுணையாக உள்ளனர். இதற்கு முக்கிய காரணம் ஒப்பந்ததாரர்கள் பணி முடித்த 28 நாட்களுக்குள் காசோலை வழங்க வேண்டும் என்பது பொறியாளர் கையேட்டின் நிபந்தனை, ஆனால் அதன்படி ஒப்பந்ததாரர்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதற்கு, மேயர் இடையூறு செய்வார் என்பதால் ஒப்பந்ததாரர்கள், ஒப்பந்த பணிகளுக்கு போட்டியிட முன்வருதில்லை. ஒப்பந்தப்புள்ளிகள், மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்ததாரர்களுக்கு வழங்குவதை, பொறியியல் துறையும், ஆணையாளரும், முந்தைய கால ஒப்பந்த நிலையினை கருத்தில் கொண்டு, மதிப்பீட்டு தொகைக்கு கேட்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு, மறு ஒப்பந்தப்புள்ளி கோர (Negotiation)–ற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்ற நடைமுறைகளை இன்றுவரை எந்த பணிக்கும் நடைமுறைப்படுத்தவில்லை. இது நாகர்கோவில் மாநகராட்சியின் செயல்பாடற்ற நிர்வாகம் மற்றும் டெண்டர் செட் அப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

மேலும், மாநகராட்சியின் ஆணையாளர் மேயரின் விருப்பத்திற்கு இணங்கியும், தனது சுய இலாபத்திற்காகவும் பணியாற்ற வேண்டியுள்ளதால், ஆணையரால் நடைமுறைப்படுத்தப்படும் பணிக்கு, தன்னிச்சையாக காசோலை வழங்க இயலவில்லை. இதனால் தான், இணையத்தில் ஒப்பந்தம் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள், மதிப்பீட்டுத் தொகையைவிட குறைவாக, எந்த ஒப்பந்ததாரர்களும் கேட்பதில்லை. இந்த மாமன்றம் இருக்கும் நாள்வரை எந்த பணிகளும் நேர்மையாக நடைமுறைபடுத்த வாய்ப்பில்லை. ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் முறையாக மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்னிலையில் திறந்தால் மட்டுமே, மதிப்பீட்டுத் தொகையில் குறிப்பிட்டுள்ள தொகைக்கோரும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு உத்தரவு வழங்க இயலும்.

மேலும், வார்டுகளில் தேவையான பணியை மட்டும் செய்வதற்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆய்வு மேற்கொண்டு அவரால், மன்றத்திற்கு பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மட்டுமே, தீர்மானம் நிறைவேற்றவும், நடைமுறைப்படுத்தவும், உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ஏனெனில் நாகர்கோவில் மாநகராட்சியில் குடிநீர் சம்பந்தமாக பல திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. அதில், பணிகள் நிறைவேறுவதற்கு முன்பே, சாலைகள் சீரமைக்கப்பட்டு மறுபடியும் தோண்டப்பட்டு மீண்டும் பணிகள் நடைபெறும் போது தேவையில்லாத நிதி இழப்பு ஏற்படுகிறது.
தோண்டப்படும் சாலைகள், தற்காலிகமாக சரி செய்வதற்கு பொறியியல் துறையில் பல வழிகள் இருந்தும், பொறியியல் துறை அவைகளை பின்பற்றுவதில்லை. காரணம் மேயரின் தலையீடும், லஞ்சமும் தலைவிரித்தாடுவது ஆகும். தற்காலிக பணிகளுக்கு பதில் நிரந்தர பணியாக வைத்தால் ஒப்பந்த பணியின் மதிப்பீடு கூடும். அதனால் கூடுதல் தொகை வைத்தால் தான் மேயருக்கு 20% சதவிகிதம் இலஞ்சமாக வாங்க முடியும் என்ற ஒற்றை கோரிக்கைக்காக மக்களின் வரிப்பணம் பலகோடி வீணடிக்கப்படுகிறது.

நாகர்கோவில் மாநகராட்சியில் தலைவிரித்தாடும் இலஞ்ச ஊழலால் நிர்வாகம் சீர்கெட்டு உள்ளது. இந்த மாமன்றம் இருக்கும் வரையில் தேவையான பணிகளுக்கு மட்டும் மன்ற அனுமதி வழங்க பரிந்துரைப்பதோடு ஒப்பந்தப்பணிக்கான வேலை உத்தரவு வழங்குவதற்கு மன்றத்திற்கு

பரிந்துரைக்கும் கோப்புகளையும் மாவட்ட ஆட்சியாளர் பரிந்துரைக்கவும் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அவ்வாறு செயல்பட்டால் ஒப்பந்ததாரர்கள் மேயரின் தலையீடு இன்றி நேர்மையான முறையில் ஒப்பந்த பணிகள் கேட்பார்கள். அதனால் அரசுக்கும் 20% சதவிகிதம், அதிகமான வருவாய் ஏற்படும். இந்நடைமுறையே முந்தைய கால கட்டங்களில் பின்பற்றப்பட்டது. ஆனால் தற்போது நாகர்கோவில் மாநகராட்சியில் நடைபெறும் அனைத்து டெண்டர்களும், மேயரால் செட்டப் செய்யப்படும் நபர்களுக்கும், அதில் அரசின் மானியத்துடன் நடைபெறும் அனைத்து பணிகளுக்கும், முன்கூட்டியே மேயர் 20% சதவிதம் தொகையை லஞ்சமாக பெற்றுக்கொண்டு லஞ்சம் கொடுத்த ஒப்பந்ததாரருக்கு மட்டும் பணி ஒதுக்கப்படுகிறது.

19. மாமன்ற கூட்டத்தில் ஊழலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காததை விளக்கும் நிகழ்வு :

தற்பொழுதும், நாகர்கோவில் மாநகராட்சியில் நடைபெறும், அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும், டெண்டர் செட்டப் செய்துதான் நடைபெற்று வருகிறது. அதை உறுதிப்படுத்தும் விதமாக, தற்போது நடைபெற்ற மாமன்ற கூட்டத்திற்கான மன்ற தீர்மானத்தை இணைத்துள்ளேன். நான் டெண்டர் முறைகேட்டை இந்த மாமன்றம் ஆரம்பித்த நாள் முதல் நான் கலந்து கொண்ட அனைத்து மாமன்ற கூட்டங்களிலும், நேரடியாகவும், மனுக்கள் மூலமாகவும் மாமன்றத்தில், எனது எதிர்ப்பை தெரியப்படுத்தியுள்ளேன். அதில் 7 மாமன்ற கூட்டங்களில் மட்டும், என்னுடைய எதிர்ப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்படாத 15 புகார் நகல்களை இணைத்துள்ளேன். எனது குற்றச்சாட்டை நிரூபிக்க, இந்த ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கு, மாமன்றத்தில் தீர்மானம் வந்தபோது, அதற்கு என்னுடைய எதிர்ப்பை தெரிவித்துள்ளேன். ஆனால் 7 கூட்டங்கள் தவிர, மற்ற கூட்டங்களில், நான் மன்றத்தில் கொடுத்த எதிர்ப்பு மனுவினை, மன்ற மினிட் புத்தகத்தில் பதிவு செய்யவில்லை.

இந்த ஊழல் குற்றச்சாட்டுகளை, நான் ஒவ்வொரு மாமன்றத்திலும் சுட்டிக்காட்டுவதால், என்னுடைய வார்டின் திட்டப்பணிகள், தேவையான இடத்தில் செய்யாமல், வீடு இல்லாத பகுதிக்கும், நல்ல நிலையில் இருக்கும் பகுதியில் சாலை அமைத்துள்ளார்கள். மக்கள் வசிக்கும் பகுதிக்கு நிதி ஒதுக்கி பணியினை செயல்படுத்தாமல், மேயரும், அதிகாரிகளும் தடை ஏற்படுத்தி வருகின்றனர். இதனால் என்னுடைய வார்டு பொதுமக்கள், மிகவும் அடிப்படை வசதியின்றி சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். எனவே இந்த ஊழல் குற்றச்சாட்டை ஆய்வு செய்யும் போது, என்னுடைய வார்டின் தேவைகளை ஆய்வு செய்து, பொதுமக்களின் தேவையினை உடனடியாக நிறைவேற்றுவதற்கு உரிய உத்தரவினை பிறப்பிக்க வேண்டுகிறேன் என தெரிவித்துள்ளார்.

8) நாகர்கோவில் மாநகராட்சி உதவிப்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் இருவரும் **06.11.2024** அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்கள்.

1. ஒப்பந்தப்புள்ளி வரிசை எண்.13

மாநகராட்சி மேற்கு மண்டலம் ஆசாரிப்பள்ளம் பேரூராட்சி கட்டிட பராமரிப்பு பணிக்கு ரூ.9,20,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.183 நாள் 23.02.2024-ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி மின்னணு முறையில் (E-Tendering) முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப் புள்ளியினை கொடுத்துள்ள திரு.R.ஜெங்கின்ஸ் (0.75% மதிப்பீட்டை விட குறைவு) ஒப்பந்ததாரருக்கு மாமன்ற தீர்மானம் எண்.381 நாள் 27.06.2024-ன்படி மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு

11.07.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணி மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அறிவுரையின்படி ஆரம்பிக்கப்பட்டு தற்சமயம் பணி நடைபெற்று வருகிறது.

2.ஒப்பந்தப்புள்ளி வரிசை எண்.21

வார்டு எண்.14 புதிய மாநகராட்சி அலுவலக கட்டிடப்பணிகள் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் ICGF/O&M Gap filling fund 2018–19 மற்றும் பொது நிதியின் கீழ் கட்டிடப் பணிகள் மட்டும் முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி புதிய அலுவலக கட்டிடத்தில் கூடுதல் அபிவிருத்தி பணிகள் ரூ.15.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 12.03.2024 அன்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.191 நாள் 23.02.2024–இன்படி மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி மின்னணு முறையில் (E-Tendering) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அளித்துள்ள திரு. சு.ஜெங்கின்ஸ் (1.43% மதிப்பீட்டை விட குறைவு) ஒப்பந்ததாரருக்கு 11.07.2024 அன்று மாமன்ற தீர்மானம் எண்.387 நாள் 27.06.2024–இன்படி ஒப்புதல் பெறப்பட்டு பணியாணை வழங்கப்பட்டது. மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படி, மேற்படி கூடுதலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இது வரை 65% பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

3. ஒப்பந்தப்புள்ளி வரிசை எண்.22

வார்டு எண்.2 பார்வதிபுரம் பேருந்து நிலையம் அருகில் கழிப்பிடம் கட்டும் பணி ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 16.02.2024 அன்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மானம் எண்.234 நாள் 23.02.2024-இன்படி மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன்படி மின்னணு முறையில் (E-Tendering) முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப் புள்ளியினை அளித்துள்ள திரு.S.ஜோசப் மைக்கேல் ராஜ் (0.05% மதிப்பீட்டை விட குறைவு) ஒப்பந்ததாரருக்கு மாமன்ற தீர்மானம் எண்.382 நாள் 27.06.2024-இன்படி ஒப்புதல் பெறப்பட்டு 11.07.2024 அன்று பணியாணை வழங்கப்பட்டது.

மேலும் மேற்படி மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட கழிப்பறை கட்டும் பணியானது தூய்மை பாரத இயக்கம் 2.0 (SBM 2.0) திட்டத்தின் கீழ் ரூ.19.24 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு திரு S.ஜோசப் மைக்கேல் ராஜ் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைப்பெற்று வந்ததில் மேற்படி மதிப்பீட்டு தொகையில் கட்டிடப்பணி மட்டும் முடிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி கழிப்பறையினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு மேற்படி கட்டிடத்தில் குடிநீர் வசதி, மின் வசதி, சுற்று சுவர் வசதி மற்றும் சுகாதார வசதிகள் போன்ற கூடுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமானது. எனவே மேற்படி கட்டடத்தின் கூடுதல் வசதிகள் மேற்கொள்ள பொது நிதியின் கீழ் ரூ.23.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 - இன்படி மின்னணு முறையில் (E-Tendering) முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மாமன்ற ஒப்புதலின் அடிப்படையில் திரு.S.ஜோசப் மைக்கேல் ராஜ் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிவுரைபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

4. ஒப்பந்தப்புள்ளி வரிசை எண்.43

மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் தெற்கு பகுதியில் வாகன நிறுத்தம் மற்றும் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.15,20,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.214 நாள் 23.02.2024-ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன்படி மின்னணு முறையில் (E-Tendering) 12.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அளித்துள்ள திரு.K.மணிகண்டன் (0.15% மதிப்பீட்டை விட குறைவு) ஒப்பந்ததாரருக்கு மாமன்ற தீர்மானம் எண்.423 நாள் 27.06.2024-இன்படி மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு 11.07.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்கள் அறிவுரையின்படி பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 28.08.2024 அன்று முடிக்கப்பட்டுள்ளது

5. ஒப்பந்தப்புள்ளி வரிசை எண்.44

வார்டு எண்.14 புதிய அலுவலக கட்டிடப்பணிகள் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் ICGF/O&M Gap filling fund 2018-19 மற்றும் பொது நிதியின் கீழ் கட்டிடப்பணிகள் மட்டும் முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி புதிய அலுவலகக் கட்டிடத்தில் கூடுதல் அபிவிருத்தி பணிகள் மற்றும் Aluminium Partition work பணிகள் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 12.03.2024 அன்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மானம் எண்.216 நாள் 23.02.2024-இன்படி மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி ஒளிவு மறைவற்ற சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன்படி மின்னணு முறையில் (E-Tendering) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அளித்துள்ள திரு.R.ஜெங்கின்ஸ் (1.29% மதிப்பீட்டை விட குறைவு) ஒப்பந்ததாரருக்கு 11.07.2024 அன்று மாமன்ற தீர்மானம் எண்.422 நாள் 27.06.2024-இன்படி ஒப்புதல் பெறப்பட்டு பணியாணை வழங்கப்பட்டது. கூடுதலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகள் மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்கள் அறிவுரையின்படி பணிகள் இதுநாள் வரை 80% பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைப்பெற்று வருகிறது.

மேற்படி அனைத்து பணிகளும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000-இன்படி சட்டத்திற்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் நடைப்பெற்றுள்ளது. இதனால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படவில்லை. மனுதாரர் வேண்டுமென்றே நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு நிர்வாக நடைமுறைகளை தவறாக சித்தரித்துள்ளார். பல மனுக்கள் கொடுத்து நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகத்திற்கு தேவையில்லாத அலைச்சலும் சங்கடமும் ஏற்படுத்தி வருகிறார். மேலும் இந்த மாமன்ற உறுப்பினரால் எழுப்பப்பட்ட புகார் மனு அடிப்படையில்லாதது ஆகும். எனவே மாண்புமிகு உள்ளாட்சி முறை மன்ற நடுவம் மேற்படி புகார் மனுவினை ஆராய்ந்து இவ்வறிக்கையினை ஏற்று புகார் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறோம். இப்பணி தொடர்புடைய இளநிலை பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளரின் அறிக்கையினையும் இத்துடன் அனுப்பியுள்ளோம் என தெரிவித்துள்ளார்கள்.

9) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், நிரூபண வாக்குமூலம், மற்றும் புகைப்படங்கள் அடங்கிய மூன்று புத்தகங்கள், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, மாநகராட்சி அலுவலர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் திரு.எஸ்.வி.உதயகுமார் தனது 12.03.2024, 24.05.2024 நாளிட்ட மனுக்கள் மற்றும் அவர் சமர்ப்பித்துள்ள நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில், மற்றவற்றிற்கு இடையில் மாநகராட்சியால் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீட்டுத் தொகையில் இருந்து ஒன்று அல்லது இரண்டு சதவீதங்கள் மட்டுமே குறைத்து ஒப்பந்தம் கேட்கப்பட்டு மாமன்ற அனுமதிக்கு வருகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளியில் அனைத்தும் இருவர் மட்டுமே கலந்து கொண்டதாக பொறியியல் துறை மூலம் மாமன்றத்திற்கு தெரியப்படுத்தப்படுகிறது. இதற்கு முன்பு ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் போட்டியின் மூலம் 10 முதல் 20 சதவீதங்கள் வரை குறைத்து சென்றது. ஆனால் தற்பொழுது ஒப்பந்ததாரர்களுக்கு அரசியல் நெருக்கடி மூலம் ஒப்பந்தப்புள்ளிகளை அனைத்தும் விலைக்கு கொடுக்கப்படுகிறது. மாநகராட்சியில் ஒப்பந்தப்புள்ளிகள் பேரத்தின் அடிப்படையில் நடைபெறுவது மட்டுமல்லாமல், ஒப்பந்தம் போடுவதற்கு முன்பே ஒப்பந்ததாரர்களால் அப்பணி செய்யப்பட்டு கடமையை செய்யும் எண்ணத்தில் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி வருகிறார்கள். மேலும் இந்த ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பாக மாமன்றத்தில் தீர்மானம் வந்த போது எனது எதிர்ப்பை தெரிவித்துள்ளேன். இந்த ஊழல் குற்றச்சாட்டுகளை மாமன்றத்தில் சுட்டிக்காட்டுவதால் எனது வார்டின் திட்டப்பணிகள் ஒழுங்காக மேற்கொள்ளப்படவில்லை. ஒப்பந்தப்புள்ளிகளை மேயருக்கும் அதிகாரிகளுக்கும் பணம் கொடுத்தவர்களுக்கும் தனக்கு விருப்பமானவர்களுக்கும் வழங்குவதோடு அத்தகைய சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் மேயர், அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்களால் நாகர்கோவில் மாநகராட்சிக்கு பலகோடி ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என தெரிவித்து தக்க நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையிலும் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் தங்களது வாக்குமூலத்திலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள அனைத்து பணிகளும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000-இன்படி சட்டத்திற்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் நடைப்பெற்றுள்ளது. இதனால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படவில்லை. மனுதாரர் வேண்டுமென்றே நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு நிர்வாக நடைமுறைகளை தவறாக சித்தரித்துள்ளார். பல மனுக்கள் கொடுத்து நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகத்திற்கு தேவையில்லாத அலைச்சலும் சங்கடமும் ஏற்படுத்தி வருகிறார். மேலும் இந்த மாமன்ற உறுப்பினரால் எழுப்பப்பட்ட புகார் மனு அடிப்படையில்லாதது ஆகும். எனவே மாண்புமிகு உள்ளாட்சி முறை மன்ற நடுவம் மேற்படி புகார் மனுவினை ஆராய்ந்து இவ்வறிக்கையினை ஏற்று புகார் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு பணிந்து கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்துள்ளார்கள்.

நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாநகராட்சி அலுவலர்களின் வாக்குமூலத்தில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000–ன்படி சட்டத்திற்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளது என்றும் மாநகராட்சிக்கு எந்த நிதியிழப்பும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், மனுதாரரின் மனுக்கள் மற்றும் அவர் சமர்ப்பித்துள்ள புகைப்படங்களுடன் கூடிய மூன்று புத்தகங்களில் இருந்து கீழ்க்கண்ட புகார்களைஅறிய முடிகிறது.

i. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் எதுவும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படவில்லை.

ஒப்பந்த நிபந்தனைப்படி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு ஒப்பந்த தொகையில் 50% பணியை ஒரே பணியாக (Single Agreement)ல் செய்திருக்க வேண்டும். மேலும் ஒப்பந்ததாரர் எந்த ஒப்பந்தத்தை கேட்கிறாரோ அந்த பணியில்

(உதாரணம் தார் சாலை என்றால் 50% சாலை பணி செய்திருக்க வேண்டும்) ஒவ்வொரு ஒப்பந்தப்பணிக்கும் ஒப்பந்த நிபந்தனைகள் உள்ளது. மேலும் ஒப்பந்ததாரரின் பண இருப்பு விவரங்களுக்கு வங்கி கேரண்டி சா்டிபிகேட் சமா்ப்பிக்க வேண்டும். உதாரணமாக 240/2021–2022, 241/2021–2022, 242/2021–2022 ஆகிய பணிகளுக்கு ஒப்பந்த நிபந்தனை எதுவும் இணையத்தில் கேட்கவில்லை.

ii. ஒப்பந்த நிபந்தனைப்படி ஒப்பந்த பணி இணையத்தின் மூலம் கேட்கப்படாதது.

As per the Tamil Nadu Transparency in Tenders Rules 2000-ன்படி இரண்டு கோடி மதிப்பு வரை உள்ள ஒப்பந்த பணிக்கு குறைந்த பட்சம் ஒப்பந்ததாரா்கள் ஒப்பந்தம் கேட்க வழங்கப்படும் கால அவகாசம் 15 நாட்கள் ஆகும். ஆனால் குற்றச்சாட்டு கடிதத்தில் குறிப்பிட்டு உள்ள 44 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி இணையத்தில் கேட்பதற்கான கால அவகாசம் 4 நாட்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஆதாரம் இணையத்திலேயே உள்ளது. தங்களுக்கு விருப்பமான ஒப்பந்ததாரா்கள் மட்டும் ஒப்பந்தத்தை இணையத்தில் கேட்டால் போதும் என்று நாகா்கோவில் மாநகராட்சி ஊழியா்கள் நினைப்பதால் இந்த விதி கடைபிடிக்கப்படுவதில்லை

iii. ஒப்பந்ததாரால் நடைமுறைப்படுத்திய பணிகளில் முழு விளக்கங்கள் அடங்கிய ஆடிட் பேலன்ஸ் சீட் ஆகியவை பெறாமல் வேண்டிய ஒப்பந்ததாரருக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரா்கள் ஏலம் சமா்ப்பிப்பதற்கு முன் டெண்டா் ஆவணத்தில் கேட்கப்பட்டுள்ள தொடா்புடைய விவரங்கள் மற்றும் ஆவணங்கள் சமா்ப்பிக்கப்படவேண்டும்.

iv. மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் ஒப்பந்ததாரரை தோ்ந்து எடுக்காமல் Negotiation மூலம் தோ்வு. Negotiation அதிகாரம் தவறாக பயன்படுத்தியுள்ளது.

மதிப்பீட்டு எண்கள். 240/2021–2022, 241/2021–2022 242/2021–2022 பணிக்கு ஜெங்கின்ஸ் ஒப்பந்ததாரா் 0.10, 0.06, 5.33 சதவிகிதத்தில் பணியை கேட்டு L2வாக இருந்தாா். அலுவலகத்தில் உள்ள அலங்கார பணிக்கு அதற்கு பொறியியல் துறை Negotiation கடிதம் மூலம் L1 ஒப்பந்ததாரா்கள் வழங்கியிருந்த அதே விலையை ஜெங்கின்ஸ் அவா்களிடம் Negotiation மூலம் குறைத்து பெற்று பணியை ஜெங்கின்ஸ்க்கு வழங்கியது.

v. Code of Conduct விதி முறையை மீறி பின்வரும் ஒப்பந்தப்புள்ளிகள் இணையத்தில் திறக்கப்பட்டுள்ளன.

தோ்தல் நடத்தை விதி 16.03.2024 அன்று மதியம் 3 மணிக்கு அமல் படுத்தப்பட்டு 06.06.2024 அன்று முடிவடைந்தது. தோ்தல் நடத்தை விதி முறையை மீறி 18.03.2024 அன்று திறக்கப்பட்ட பணிகளுக்கான விலைப்புள்ளிகள் Contract No.518/2023-2024, 520/2023-2024, 521/2023-2024, 522/2023-2024, 523/2023-2024, 548/2023-2024, 549/2023-2024.

vi Lead of Cost முறைப்படி விலை நிர்ணயம் செய்யப்படவில்லை.

12.03.2024 மற்றும் 24.05.2024 ஆகிய இரு தேதிகளில் குறிப்பிட்ட அனைத்து பணிகளிலும் Schedule of rate ஆனது ஒரே மதிப்பில் உள்ளது. அரசானது குவாரியில் கிடைக்கும் பொருட்களின் விலையை நிர்ணயிக்கும். அது குவாரியில் இருந்து பணி செய்யும் இடத்திற்கு வண்டி மூலம் எடுத்து செல்ல Lead of Cost பொறியியல் துறை நிர்ணயித்து, அதன் மொத்த விலையை நிர்ணயிக்கும். நாகர்கோவில் மாநகராட்சியில் அனைத்து வார்டுகளில் நடக்கும் பணிக்கும் ஒரே Lead of Cost பயன்படுத்தப்படுகிறது.

vii. ஒரே மாதிரியான பணிகளுக்கு வெவ்வேறு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. 531/2023–2024 பணிக்கு வரிசை எண்.19–ல் குறிப்பிட்டுள்ள Gypsum False Ceiling பணிக்கு ரூ 1100/– வழங்கப்பட்டுள்ளது. இதே பணியானது மதிப்பீட்டு எண்.523/2023–2024 பணியிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் மதிப்பீட்டு தொகை ரூ 1700/–என குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு பணிகளுக்கும் ஒரே Dataவே உள்ளது.

viii.பயன்படுத்தாத பொருளை ஒப்பந்தப்புள்ளியில் இணைத்து பணம் கையாடல் செய்ய திட்டமிடல்.

மதிப்பீட்டு எண்.553/2023–2024 பணிக்கு Wetmix mecadam பயன்படுத்த ஒப்பந்தத்தில் உள்ளது. தற்சமயம் பணி நிறைவடைந்து விட்டது. அதில் Wetmix ஏதும் பணி நடைபெற்ற இடத்தில் பயன்படுத்தவில்லை. எனவே இந்த பணியை முறையாக லஞ்ச ஒழிப்புத் துறை மூலம் ஆய்வு செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

ix. Schedule of Rate –ல் இல்லாத பல பணிகள் செய்யப்பட்டது.

554/2023–2024 பணிக்கு Schedule of Rate–ல் இல்லாத பல பணிகள் நடைபெற்று உள்ளன. Schedule of Rate –என்பது அரசால் விலை நிர்ணயம் செய்த பொருட்களின் விலை விகிதம் ஆகும்.

x. தார் சாலையின் கன அளவு மற்றும் தாரின் அளவை கண்டறிய அதனை சோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட தார் சாலைகள் அனைத்தும் ஒப்பந்தத்தில் கூறியபடி Compact செய்யப்படவில்லை. இப்பணிகளை முறையாக ஆய்வு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட நெடுஞ்சாலைத் துறை ஆய்வு கூடங்களுக்கு அனுப்ப வேண்டும்.

xi. GST மூலம் அரசுக்கு வருவாய் இழப்பீடு

ஒப்பந்த பணிகள் அனைத்தும், சரக்கு மற்றும் சேவை வரிக்கு உட்பட்டு இருப்பதால், ஒப்பந்ததாரர்கள் தங்கள் பெயரில் மாநகராட்சியால் வழங்கப்படும் சரக்கு மற்றும் சேவைக்கான தொகைக்கு, எவ்வளவு தார், சிமெண்ட், மணல், ஜல்லி ஆகியவை பயன்படுத்தினார்களோ, அதற்கான சரக்கு மற்றும் சேவை வரியை தங்களுடைய சரக்கு மற்றும் சேவை வரி கணக்கில் முறையாக கணக்கு காட்டி இருப்பார்கள். அவைகளை சரக்கு மற்றும் சேவை வரி துறையின் உதவியோடு தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

xii. ஒப்பந்தப்புள்ளிகள் Tender Set up செய்வதால் வருவாய் இழப்பீடு

சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 கீழ் ரூ.10,00,00,000 (பத்து கோடி)க்கு பணி 2021–ல் நடைபெற்றுள்ளது. அதில் 21.10% மதிப்பீட்டு தொகையில் இருந்து குறைவான டெண்டர் கேட்டவருக்கே பணி ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சேமிக்கப்பட்ட தொகையினை, வேறு பணிகள் செய்வதற்கு மன்றத்தில் பொருள் வைக்கப்பட்டு, அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 07.07.2021 அன்று உயர் கோபுரம் மின் விளக்கு மற்றும் புத்தேரி மேம்பால தெருவிளக்கு ஓராண்டு பராமரிப்பிற்கு 2 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் கேட்கப்பட்டது. அதில் ஏழு ஒப்பந்ததாரர்கள் கலந்துள்ளனர். அந்த பணிக்கு மதிப்பீட்டு தொகையில் இருந்து 25.12 சதவிகிதம் குறைத்து பணி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரரின் புகார்கள் அனைத்தும் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியது தொடர்பானதாகும். கடுமையான இக்குற்றசாட்டுகளுக்கு ஆதாரங்களாக மனுதாரரால் Vol.1 to Vol.III வரை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்கள் இம்முறை மன்றத்தால் முழுமையாக பரிசீலிக்கப்பட்ட நிலையில் மேற்கண்ட ஆவணங்கள், விரிவான ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று இம்முறைமன்றம் கருதுகிறது.

எனவே, மனுதாரர் மேலே குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் உண்மைத் தன்மை மற்றும் அரசுக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதா என்றும் விதி மீறல்கள் குறித்தும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த பணிகள், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு நடைபெற்றுள்ளதா என்பது குறித்தும் அறியும் பொருட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை ஒரு சிறப்பு ஆய்வினை மேற்கொள்ளும்படி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறைக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்கின்றது. மேலும் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் அறிக்கையை பெற்று அதன் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை எடுக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.S.V. உதயகுமார்,
எண்.439A,M.S.ரோடு,
பார்வதிபுரம்,
நாகர்கோவில்–629 003.

2) ஆணையர்,
நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில்.

3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம்,
பேராசிரியர் அன்பழகன் மாளிகை,
4வது தளம், நந்தனம், சென்னை–600 035.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர் / செயலாளர் (FAC).